18.03.2026

O.S.No. 18/2024

PW1– வேம்பு அம்மாள் – த/பெ. முத்தையா

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 18.03.2026

முதல் விசாரணை தொடர்ச்சி :

1. 1 முதல் 3 வாதிகளின் ஆதார்அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. முத்தையாவின் இறப்பு சான்றிதழ் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 1ம் வாதி, 1ம் பிரதிவாதியிடம் வாரிசுசான்றிதழ் கேட்ட மனுவின் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதற்கான ஒளிநகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 1ம் வாதி வாரிசுசான்றிதழ் கேட்டு மனு கொடுத்தற்கு, தள்ளுபடி செய்யப்பட்டதற்கான Status இணையவழி பதிவிறக்க நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்குவிசாரணை (பிரதிவாதிகள் தரப்பில்)**

1. இறந்துபோன முத்தையா முதலியார் எனது கணவர். குத்தாலம் எனது கணவரின் முதல்தாரம். குத்தாலம் 1982ம் ஆண்டு இறந்துவிட்டார். எனக்கும், முத்தையா முதலியாருக்கும் திருமணம் நடைபெற்று 37 ஆண்டுகளாகிறது. எனக்கும், முத்தையா முதலியாருக்கும் திருமணம் 1987ம் ஆண்டு நடைபெற்றது என்று கூறியுள்ளேன், அதை நிரூபணம் செய்ய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. குத்தாலத்திற்கும், முத்தையா முதலியாருக்கும் பிறந்த குழந்தை தான் 4ம் வாதி என்றால் சரிதான். எனக்கும், முத்தையா முதலியாருக்கும் பிறந்த வாரிசுகள் 2,3 வாதிகள் என்றால் சரிதான். முத்தையா முதலியாரின் தந்தை பெயர் அங்கப்ப முதலியார், தாயார் பெயர் பொன்னம்மாள். அவர்கள் இருவரும் காலம் சென்றுவிட்டனர். எனது கணவருக்கு 2 திருமணம் என்பதால்தான் நான் கேட்ட வாரிசுசான்றிதழ் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Sd/-K.N.Guru
District Munsif, Shenkottai